

# பணி—அதன் ஆதி வடிவம்

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில்
அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும்
வைத்தார் (ஆதியாகமம் 2:15).

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.

தற்போதைய பதிப்பு: 2024

**தகவல் தொடர்புக்கு**

All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

**தொலைபேசி:** +91-80-25452617
**மின்னஞ்சல்: bookrequest@apcwo.org**
**இணையதளம்: apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்” என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**
**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil — Work—Its Original Design)

# பணி—அதன் ஆதி வடிவம்

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில்
அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும்
வைத்தார் (ஆதியாகமம் 2:15).

# பொருளடக்கம்


1. நிறைவான உலகில் பணி செய்தல் 1

2. பணியிடம்—வீழ்ச்சியின் விளைவும் சிலுவையின் பலனும் 9

3. குறையுள்ள உலகில் பணி செய்தல் 20

# 1
# நிறைவான உலகில் பணி செய்தல்

ஆதியாகமம் புத்தகத்தில் உள்ள முதல் மூன்று அத்தியாயங்கள், தேவன் பூமியின் மீது வஸ்துக்களை உருவாக்கி ஒழுங்குபடுத்தியதை விவரிக்கின்றன. மனுக்குலத்தின் வடிவமைப்பு, சிருஷ்டிப்பு மற்றும் தேவன் நமக்குக் கொடுத்த கட்டளை போன்றவற்றையும் கூட நாம் இங்கு காண்கிறோம். “பணி” சம்பந்தப்பட்டதும் நாம் செய்யக்கூடியவைகளுமான கவனத்தில்கொள்ள வேண்டிய சிலவற்றை நாம் இங்கே காணலாம்.

## நாம் ஆக்கப்பூர்வமாக இருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளோம்

நாம் தேவனுடைய சாயலிலும் அவருடைய ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். தேவன் தம்முடைய சொந்த சாயலிலும் ரூபத்திலும் நம்மை சிருஷ்டிப்பதற்கான அவரது நோக்கம், இங்கே பூமியில் அவர் (தேவன்) நம் மூலம் மறுபடியும் உருவாக்கப்படவும், பிரதிநிதித்துவப்படுத்தப்படவும், வெளிப்படுத்தப்படவும் வேண்டும் என்பதுதான். தேவனுடைய பண்புநலன்களில் ஒன்று அவர் சிருஷ்டிகர் என்பதாகும், ஆகவேதான் அவர் ஆக்கப்பூர்வமானவராய் இருக்கிறார். எனவே, தேவனுடைய சுபாவத்தின் இந்த அம்சத்தை வெளிப்படுத்தவே ஜனங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளனர் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். நாம் ஆக்கப்பூர்வமானவர்களாய் இருக்க வடிவமைக்கப்பட்டுள்ளோம். ஆதாமும் ஏவாளும், மற்றும் எல்லா மனுஷர்களும் பலுகி, பெருகி, அடக்கி, பூமியில் ஆளுகை செய்வார்கள். அதாவது, பூமியில் தாங்கள்

சாதித்த காரியங்கள் மூலமாக தேவனுடைய சிருஷ்டிப்புத் திறன்களை வெளிப்படுத்துவார்கள். ஜனங்கள் தேவனுடைய சிருஷ்டிப்பைக் கண்டுணர்ந்து, அவர் தம்முடைய சிருஷ்டிப்பில் உருவாக்கியதைக்கொண்டு அற்புதமான காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

## நாம் பணி செய்யும்படிக்கு வடிவமைக்கப்பட்டுள்ளோம்

*“தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும்* (உழுதல், சாகுபடி செய்தல்) *காக்கவும்* (பாதுகாத்தல், பத்திரப்படுத்துதல்) *வைத்தார்”* (ஆதியாகமம் 2:15). தேவன் ஆதாமை ஏதேன் தோட்டத்தின் மத்தியப் பகுதியில் வைத்து சில பொறுப்புகளை கொடுத்தார். ஆதாம் தோட்டத்தை உழுது பயிரிட வேண்டியிருந்தது; அதாவது அவனுக்கு செய்ய வேண்டிய வேலை இருந்தது. மனுஷனுடைய வீழ்ச்சிக்கு முன்பே தேவன் ஏதேன் தோட்டத்தில் வேலையை அறிமுகப்படுத்தி வைத்தார். பணி தேவனால் ஏற்படுத்தித் தரப்பட்ட ஒன்றாகும். எனவே, பணி செய்தல் என்பது ஒரு நல்ல விஷயம். தேவன் திருமணத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் முன்பே மனுஷனுக்கு பணியை ஏற்படுத்திக் கொடுத்தார்.

தேவன் மனித இனத்திடம் ஒப்படைத்ததை மீறுவதில் ஆர்வம்காட்டினவனாகத்தோன்றினபிசாசிடமிருந்து, ஆதாம் ஏதேன் தோட்டத்தைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. ஆதாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்தவரை, அதாவது தனக்குள் தேவனுடைய மகிமையுடையவனாய் (தேவனுடைய சாயல் மற்றும் ரூபம்), தேவனுடைய சமூகத்தில் இருந்தவரை, அவனால் வெற்றிகரமாக சத்துருவைத் துரத்திவிடவும், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டதைப் பாதுகாக்கவும்

முடிந்திருக்கும். மேலும், தோட்டத்தில் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பானது ஆதாமின் வம்சத்தின் மூலம் பூமியிலுள்ள ஜனங்கள் அனைவருக்கும் அது கையளிக்கப்பட்டது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

## ஏவாள் பணியிடத்தில் ஏற்ற உதவியாளராக இருக்கும்படி சிருஷ்டிக்கப்பட்டாள்

தேவன், *“ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்”* (ஆதியாகமம் 2:18) என்று சொல்லி ஏவாளை வடிவமைத்தார். ஏவாள் ஆதாமுக்குப் பொருத்தமான ஒருத்தியாகவும், அவனைத் தனிமையிலிருந்து விடுவிப்பதற்காகவும், அதே சமயத்தில், தோட்டத்தில் ஆதாமுடைய பொறுப்புகளில் அவனுடன் இணைந்து உழைக்கக்கூடியவளாகவும், பங்காளியாகவும் இருக்குமாறு வடிவமைக்கப்பட்டாள். தோட்டத்தைப் பண்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் ஆதாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட கட்டளையும் கூட இதில் அடங்கும். தோட்டத்தில் ஏவாளுக்கு ஒரு இடம் இருந்தது, ஆதாமுடன் இணைந்து அதைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் அவளுக்கும் ஒரு பங்கு இருந்தது. மனித இனத்திற்குக் கொடுக்கப்பட்ட கட்டளைப்படி, ஆண்களுக்கு இணையாக வேலை செய்யும்படி பெண்கள் தேவனால் வடிவமைக்கப்பட்டுள்ளனர். பணியிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் பெண்களுக்கென்று ஒரு பங்கும் ஸ்தானமும் உண்டு.

## குறையற்ற உலகில் வேலை செய்தல்

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்யாமல், தேவனுடைய முதன்மையான திட்டத்தின்படி, மனித இனம் அப்படியே தொடர்ந்து வாழ்ந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? தோட்டத்தில் வேலை செய்திருந்தால் எப்படி இருந்திருக்கும். மேலும் காலம் செல்லச் செல்ல, குறிப்பாக வேலை

தொடர்பான காரியங்களில் தேவன் ஜனங்களுக்காக விரும்பிய அனைத்திலும் வளர்ந்து அதில் பிரவேசித்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? மனுஷன் வீழ்ச்சியடையாமல் இருந்திருந்தால், ஒரு குறையற்ற உலகில் பணியிடம் எப்படி இருக்கும்?

வேதாகமக் கண்ணோட்டத்தில் கவனிக்க வேண்டிய சில காரியங்கள் இங்கே உள்ளன.

## *வேலை நாட்களிலும் கூட ஆராதனை தொடர்ந்து நடந்திருக்கும்*

தேவனுடைய பிரசன்னம் நாள் முழுவதும் நம்மை நிரப்பியிருந்திருக்கும். நாம் நாள் முழுவதும் தேவனுடன் பரிபூரணமான ஐக்கியத்தில் இணைந்திருந்திருப்போம். வேலையும் ஆராதனையும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்திருக்காது அல்லது நாளின் வெவ்வேறு நேரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்திருக்காது.

## *ஆராதனை மற்றும் பணி இரண்டும் தேவனுக்கே உரியது*

பணி ஒரு இடைக்கால வேலையாக இருந்திருக்காது, மாறாக பரலோகக் கட்டளையாக இருந்திருக்கும். தேவன் அதைக் கட்டளையிட்டதால், அது தேவனுக்கான ஊழியமாக இருந்திருக்கும். ஒவ்வொருவரும் தேவனுக்கு பணி செய்வதுபோல் வேலை செய்துகொண்டிருப்பார்கள். “நான் இப்போது உலகப் பிரகாரமான அல்லது உலகத்தோடு தொடர்புடைய ஒன்றைச் செய்கிறேன். வீட்டிற்குச் சென்ற பிறகு, தேவனை ஆராதித்தல் போன்ற பரிசுத்தமான ஒன்றைச் செய்வேன்” என்ற உணர்வு நமக்கு இருக்காது.

## தேவனும் பணியில் இருந்திருப்பார்

தோட்டத்தில் ஒரு சராசரியான நாள் எப்படி இருந்திருக்கும் என்பதை ஆதியாகமம் 3:8 சித்தரிப்பதைப் பார்ப்பது சுவாரஸ்யமானது. அதில், *“பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். ...”* என்று சொல்லப்பட்டுள்ளது. அந்தத் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் வாழ்ந்தபோதும், அவர்கள் அதைப் பண்படுத்தி காத்துக்கொண்டிருந்தபோதும் கூட தேவன் அவர்களைச் சந்தித்து ஐக்கியங்கொண்ட ஒரு இடத்தின் படத்தைத்தான் இது நமக்குக் காட்சிப்படுத்துகிறது. ஒருவேளை தேவன் அவர்களைச் சந்தித்து அவரது சிருஷ்டிப்பில் மறைந்திருக்கும் இரகசியங்களை அவர்களுக்குக் கற்பித்திருக்கலாம். ஒருவேளை தேவன் அவரது சிருஷ்டிப்பில் என்னென்ன இருந்தது, அவற்றைப் பயன்படுத்தி எப்படி புதிய காரியங்களைச் செய்வது, புதிய பெருட்களைச் செய்யும் வழிகள் என்ன என்பன போன்ற பல காரியங்களை அவர்களுக்குக் காட்டியிருக்கலாம். பணி செய்யும்போது, தேவன் கூடவே இருப்பதால், புதிய கண்டுபிடிப்புகள், தேடல் மற்றும் அரிதான வாய்ப்புகளால் தேவனுடைய சிருஷ்டிப்புத் திறன்கள் ஜனங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். தேவனுடைய சிருஷ்டிப்பில் இருந்த இயற்கை விதிகளைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்துவது பேரார்வமாக இருந்திருக்கும். ஏசாயா தீர்க்கதரிசி நமக்காக இந்தப் படத்தை—அதாவது, நிலத்தை எப்படி உழுவது மற்றும் எப்படி அறுவடை செய்வது என்று விவசாயிக்கு தேவன் கற்றுக்கொடுக்கும் படத்தை சித்தரிக்கிறார்.

**ஏசாயா 28:23-29**

**23 செவிகொடுத்து என் சத்தத்தைக் கேளுங்கள்; நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்.**

**24 உழுகிறவன் விதைக்கிறதற்காக நாள்தோறும் உழுகிறதுண்டோ? தன் நிலத்தைக் கொத்தி நாள்தோறும் பரம்படிக்கிறது உண்டோ?**

**25 அவன் அதை மேலாக நிரவினபின்பு, அததற்கேற்ற இடத்தில்
உளுந்தைத் தெளித்து, சீரகத்தைத் தூவி, முதல்தரமான
கோதுமையையும் தெரிந்துகொண்ட வாற்கோதுமையையும்
கம்பையும் விதைக்கிறான் அல்லவோ?**
**26 அவனுடைய தேவன் அவனை நன்றாய்ப் போதித்து,
அவனை உணர்த்துகிறார்.**
**27 உளுந்து தூலத்தாலே போரடிக்கப்படுகிறதில்லை; சீரகத்தின்மேல்
வண்டிலின் உருளைச் சுற்ற விடப்படுகிறதுமில்லை; உளுந்து
கோலினாலும் சீரகம் மிலாற்றினாலும் அடிக்கப்படும்.**
**28 அப்பத்துக்குத் தானியம் இடிக்கப்படும்; இடைவிடாமல்
அவன் அதைப் போரடிக்கிறதில்லை; அவன் தன் வண்டிலின்
உருளையால் அதை நசுக்குகிறதுமில்லை, தன் குதிரைகளால் அதை
நொறுக்குகிறதுமில்லை.**
**29 இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது;
அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்.**

தேவனுடைய ஞானம் அவருடைய சிருஷ்டிப்புகள் அனைத்திலும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. *"அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார்"* என்று எரேமியா 10:12 நமக்குச் சொல்கிறது.

ஞானம் பேசுகிறது மற்றும் அறிவிக்கிறது:

**நீதிமொழிகள் 8:22-31**

**22 கர்த்தர் தமது கிரியைகளுக்குமுன் பூர்வமுதல் என்னைத் தமது
வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார்.**
**23 பூமி உண்டாகுமுன்னும், ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் நான்
அபிஷேகம் பண்ணப்பட்டேன்.**
**24 ஆழங்களும், ஜலம் புரண்டுவரும் ஊற்றுக்களும் உண்டாகுமுன்னே
நான் ஜநிப்பிக்கப்பட்டேன்.**
**25 மலைகள் நிலைபெறுவதற்கு முன்னும், குன்றுகள் உண்டாவதற்கு
முன்னும்,**
**26 அவர் பூமியையும் அதின் வெளிகளையும், பூமியிலுள்ள மண்ணின்
திரள்களையும் உண்டாக்குமுன்னும் நான் ஜநிப்பிக்கப்பட்டேன்.**
**27 அவர் வானங்களைப் படைக்கையில் நான் அங்கே இருந்தேன்;**

**அவர் சமுத்திர விலாசத்தை வட்டணிக்கையிலும்,**
**28 உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, சமுத்திரத்தின் ஊற்றுக்களை அடைத்து வைக்கையிலும்,**
**29 சமுத்திர ஜலம் தன் கரையை விட்டு மீறாதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்துகையிலும்,**
**30 நான் அவர் அருகே செல்லப் பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்.**
**31 அவருடைய பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்துகொண்டிருந்தேன்.**

எனவே, தேவன் தமது படைப்பைக் கண்டறிய ஜனங்களுக்கு உதவியதால், அவர்கள் தேவனுடைய மனதிற்குள் உள்ள தேவனுடைய ஞானத்தைப் பற்றிய நுண்ணறிவைப் பெற்றிருப்பார்கள்.

## *பலுகுதல், பெருகுதல் மற்றும் அதிகரிப்பு ஆகியவை இயல்பான பலனாக இருக்கும்*

எதைச் செய்யும்படி மனுஷன் வடிவமைக்கப்பட்டானோ அதைச் செய்யும்படி தேவன் அவனை ஆசீர்வதித்தார். தேவனுடைய ஆசீர்வாதம் பலுகுதலையும், பெருக்கத்தையும், அதிகரிப்பையும் ஏற்படுத்தியிருக்கும். காரியங்கள் வளர்ச்சியடைவதையும், செழிப்பதையும், பெருகுவதையும், அதிகரிப்பதையும் பார்ப்பது இயல்பான ஒன்றாக இருந்திருக்கும்.

## *வேலை சுவாரஸ்யமானதாக, இன்பமான ஒன்றாக இருந்திருக்கும்*

குறையற்ற ஒரு உலகில், வேலை செய்வது என்பது சுவாரஸ்யமாகவும், இன்பமாகவும் இருந்திருக்கும். ஒவ்வொரு நாளின் முடிவிலும், காரியங்கள் கைகூடி வருவதை நாம் மகிழ்ச்சியுடன் பார்த்து, அவற்றைக் கண்டு

மகிழ்ந்திருப்போம். அந்த நாளின் முடிவில் விரக்தியின் உணர்வோ அல்லது வீணாய் பாடுபட்டோம் என்ற உணர்வோ இருக்காது. ஒவ்வொரு நாளின் பணியும் அர்த்தமுள்ளதாகவும், ஒரு குறிக்கோள் உடையதாகவும் மற்றும் மகிழ்ச்சியாக அனுபவிக்கக் கூடியதாகவும் இருந்திருக்கும். வரவிருக்கும் காலத்தில் காரியங்கள் எப்படி இருக்கும் என்பதைக் குறித்து ஏசாயா நமக்குத் தரும் கண்ணோட்டம் இதைப் பற்றிய ஒரு பார்வையை நமக்குத் தருகிறது.

**ஏசாயா 65:21-23**

**21 வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள்.**

**22 அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்.**

**23 அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை; அவர்களும், அவர்களோடேகூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள்.**

பணியிட பேரழிவுகள், துரதிர்ஷ்டங்கள், பணிநீக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவை தெரிந்திருக்காது!

# 2

# பணியிடம்—வீழ்ச்சியின் விளைவும் சிலுவையின் பலனும்

## வீழ்ச்சி அதைக் கடினமாக்கிவிட்டது

மனிதனின் வீழ்ச்சி பணியிடத்தில் அதன் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. தேவன் அதற்கான விளைவை அறிவித்தார்.

**ஆதியாகமம் 3:17-19**

**17 ... "பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்.**
**18 அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்.**
**19 நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்."**

பணியிடம் சபிக்கப்பட்டுவிட்டது. பலனை அனுபவிக்க வியர்வை சிந்துதலும், உழைப்பும் மற்றும் பாடுபடுதலும் இருக்கும். மேலும் இது ஒரு நபரின் வாழ்நாள் முழுவதும் தொடரும் செயலாக இருக்கும். பணியிடத்தில் எதிர்க்கும், தடுக்கும் மற்றும் வலியை (முட்களையும் குருக்குகளையும்) ஏற்படுத்தும் விஷயங்கள் இருக்கும். இவை எதுவுமே பணியிடத்திற்கான தேவனுடைய ஆதி வடிவமைப்பின் பகுதியாக இருந்ததில்லை.

## மனிதனின் வீழ்ச்சியை சிலுவை மீட்டெடுக்கிறது

வீழ்ச்சியிலிருந்து நம்மை முற்றிலுமாக மீட்டுக்கொள்ளும்படிக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பூமிக்கு வந்தார். வீழ்ச்சியின்

காரணமாக மனித இனத்தின் மீது வந்த அனைத்தும், சிலுவையில் நிறைவேறிய கர்த்தராகிய இயேசுவின் மீட்பின் கிரியையாகிய அவரது மரணம், அடக்கம்பண்ணப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் தலைகீழாக மாற்றப்பட்டது. பணியிடத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவும் இதில் அடங்கும். இயேசுவின் மூலம் இதைச் செய்ய, அதாவது *“அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும்...”* (கொலோசெயர் 1:20) தேவனுக்குப் பிரியமாயிற்று என்று வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது. பணியிடம் உட்பட வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட “அனைத்து விஷயங்களையும்” சிலுவையானது மீட்டு ஒப்புரவாக்குகிறது. நாம் வீழ்ச்சியிலிருந்து மீட்கப்பட்டுள்ளோம். நமது மீட்பின் ஒரு பகுதி நிகழ்கால யதார்த்தமாக இருக்கிறது (கலாத்தியர் 1:4; எபேசியர் 1:7) மற்றும் நமது மீட்பின் இன்னொரு பகுதி இன்னும் எதிர்காலத்தில் நடைபெற உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். நம் மீட்பின் முழுமையை நாம் இன்னும் அனுபவிக்கவில்லை (எபேசியர் 1:14). சிருஷ்டியானது தேவனுடைய புத்திரர் (பிள்ளைகள்) வெளிப்படுவதற்கும், வீழ்ச்சியின் காரணமாக அது உட்படுத்தப்பட்ட சீர்கேட்டிலிருந்து விடுபடுவதற்கும் காத்திருக்கிறது என்பதையும் நாம் புரிந்துகொள்கிறோம் (ரோமர் 8:19-23). மீட்கப்பட்ட ஜனங்களாக, நாம் இந்த வாழ்க்கையில் வரவிருக்கும் காலத்தின் வல்லமைகளை ருசி பார்க்க இருக்கிறோம் (எபிரெயர் 6:5). இங்கேயும் கூட இப்போதும் நாம் அனுபவிக்கக் கூடிய மீட்பின் பலன்கள் உள்ளன. உதாரணமாக, எதிர்காலத்தில் நாம் உயிர்த்தெழுப்பப்பட்ட மகிமையான சரீரங்களைப் பெற்றிருப்போம், ஆனால் இப்போது நமது மீட்பின் ஒரு பகுதியாக, நோய் மற்றும் வியாதியிலிருந்து குணமடையலாம், அது நமக்கு நன்மை

பயக்கும். இதேபோல், வரவிருக்கும் காலத்தில் பணியிடத்தை விவரிக்கும் அதே வேளையில், மீட்பின் பலன்கள் நமது தற்போதைய வேலை, பணியிடம் மற்றும் வேலை செய்யும் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கலாம் என்று ஏசாயா 65:21-23 விவரிக்கிறது.

## உடன்படிக்கையானது வீழ்ச்சியடைந்த உலகில் உள்ள ஜனங்களை மீட்டுக்கொண்டது

விசுவாசிகளாக, நாம் வீழ்ச்சியடைந்த உலகில் வாழ்ந்தாலும் தேவனுடன் உடன்படிக்கை பண்ணப்பட்டு, மீட்கப்பட்ட ஜனங்களாக இருக்கிறோம். அப்படியானால், இவ்வுலகில் இருக்கும் தீமையை நாம் எதிர்கொள்வோம் என்பது உண்மைதான். இருப்பினும், கர்த்தரால் மீட்கப்பட்டவர்களாக—சிலுவையின் வல்லமை நம் வாழ்க்கையில் செயல்படும்படிக்கு, அந்தப் புதிய உடன்படிக்கையின் ஜனங்களாக நாம் வாழ இங்கே இருக்கிறோம். எனவே, ஒவ்வொரு நாளும் நமது பணியிடத்திற்குச் செல்லும்போது, சிலுவையினால் உண்டான மீட்பின் வல்லமை நமது பணி, நமது பணியிடம் மற்றும் நமது பணி செய்யும் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதை நாம் விசுவாசிக்க வேண்டும். சிலுவையின் நிமித்தமாக, சாபம் தலைகீழாக மாறியது மற்றும் நமது பணியிடம் ஆசீர்வதிக்கப்பட்டது. சிலுவையின் நிமித்தமாக, நாம் செய்யும் வேலையில் பலனையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துகிறோம். முட்களையும் குருக்குகளையும், பணியிடத்தில் எதிர்க்கும், தடுக்கும் மற்றும் வலியை ஏற்படுத்தும் விஷயங்களை சிலுவையின் நிமித்தமாக, நாம் ஒன்றுமில்லாமல் ஆக்கி, அதற்குப் பதிலாக, தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும் என்று அறிவிக்கிறோம். சிலுவையின் மூலமாக, பணியிடத்திற்கான தேவனுடைய ஆதி வடிவமைப்பை நாம் மீட்டெடுக்க முடியும்.

தேவன் ஆபிரகாமுடன் இரத்த சம்பந்தமான உடன்படிக்கையை ஏற்படுத்தினார், அதை நாம் ஆபிரகாமிய உடன்படிக்கை என்று குறிப்பிடுகிறோம். பின்னர், மோசேயின் மூலம், பழைய உடன்படிக்கை என்று அறியப்படும் நியாயப்பிரமாணத்தையும் தேவன் ஏற்படுத்தினார்; இதுவும் கூட இரத்த பலியின் அடிப்படையில் இருந்தது. இந்த உடன்படிக்கைகள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் கல்வாரியில் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட புதிய உடன்படிக்கையைச் சுட்டிக்காட்ட உதவியது. புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையை விட மிகவும் மேலானது. இயேசுவானவர் *“அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்”* (எபிரெயர் 7:22). *“... இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்”* (எபிரெயர் 8:6).

“பணி,” “உழைப்பு,” “ஐசுவரியத்தை பெருக்குதல்,” மற்றும் பல விஷயங்கள் ஆபிரகாமிய உடன்படிக்கை மற்றும் பழைய உடன்படிக்கையால் எப்படி தாக்கத்துக்கு உள்ளானது என்பதை நாம் பார்ப்போம். இந்த இரண்டு உடன்படிக்கைகளும் பணியிடத்திற்கான ஆசீர்வாதங்களை விட அதிகமான ஆசீர்வாதங்களைத் தன்னில் உடையனவாக இருந்தன என்பது உண்மைதான். ஆனால், இந்த ஆய்வில், வேலை, பணியிடம் மற்றும் பணி வாழ்க்கை ஆகியவற்றில் நாம் குறிப்பாக கவனம் செலுத்துகிறோம், ஆகவேதான், உடன்படிக்கைகள் இந்தப் பகுதிகளில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை ஆராய்வதில் நாம் ஆர்வமாக உள்ளோம். இந்த வீழ்ச்சியானது நிலம் சபிக்கப்பட்டுவிட்டது என்ற ஒரு தெளிவான அறிவிப்பை அறிவித்தது; மேலும் எந்தவொரு பலனையும் காண மனுஷன் வேலை செய்து உழைக்க வேண்டியிருந்தது. சுவாரஸ்யமாக, ஆபிரகாமிய

உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்களுக்கு அல்லது பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்களுக்கு, தேவன் இந்தப் பகுதிகளில் உள்ள ஆசீர்வாதங்களை உச்சரித்தார். அவர்கள் அதை அனுபவித்தார்கள்! புதிய உடன்படிக்கையானது பழைய உடன்படிக்கையை விட மிக உயர்ந்ததாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பதால், அதையே எதிர்பார்ப்பது நமக்கு இயல்பானதாக இருக்க வேண்டும்; இல்லையெனில், நமது பணி வாழ்க்கையில் மீட்பின் ஆசீர்வாதங்கள் மற்றும் உடன்படிக்கை ஆசீர்வாதங்களின் பெரிய நன்மைகள் கிடைக்காது.

தேவன் ஒரு ஆசீர்வாதத்தை அறிவிக்கும்போது, அந்த ஆசீர்வாதம் விரிவானதும் வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறதுமாய் இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். *"நான் உன்னையும் உன் சந்ததியையும் ஆசீர்வதிப்பேன்"* என்று தேவன் ஆபிரகாமிடம் சொன்னார். குணமடைதலானது இந்த ஆசீர்வாதத்தின் ஒரு பகுதி என்று ஆபிரகாமுக்கும் அவனது சந்ததியினருக்கும் அவர் ஒருபோதும் குறிப்பிடவில்லை. இருப்பினும், சுவிசேஷங்களில் நாம் பார்க்கும்போது, 18 வருடங்களாக கூனியாக இருந்த ஒரு பெண்ணை கர்த்தராகிய இயேசு கண்டபோது, அவள் ஆபிரகாமுடைய சந்ததியாக இருந்ததால் குணமடைவதற்கான உரிமை அவளுக்கு உண்டு என்று அறிவித்து அவளைக் குணப்படுத்துகிறார். அவர், *"இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா"* என்றார் (லூக்கா 13:16). ஆபிரகாமின் ஆசீர்வாதத்தை அவள் சுதந்தரித்துக்கொண்டதால் குணமடைவதற்கான உரிமை அவளுக்கும் இருந்தது; தேவன் ஆபிரகாமிடம் அந்த ஆசீர்வாதங்களில் குணமடைதலும் ஒரு ஆசீர்வாதமாக இருக்கும் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. *"நான் உன்னை ஆசீர்வதிப்பேன்"* என்றும், ஆபிரகாமின்

சந்ததியினருடன் இந்த ஆசீர்வாத உடன்படிக்கையை நிலைநாட்டுவேன் என்றும் தேவன் சொல்லியிருந்தார் (ஆதியாகமம் 12:1-3; ஆதியாகமம் 17:7). ஆகவே, நம்மை ஆசீர்வதிப்பதாக தேவன் நமக்கு அறிவிக்கும்போது, தாம் யார் என்பதை அவர் நம் வாழ்வில் வெளிப்படுத்துவார் என்பதே அதன் அர்த்தமாகும்; அதாவது, அவருடைய நன்மை, அவருடைய தயவு, அவருடைய இரக்கங்கள், அவருடைய வல்லமை, அவருடைய சுகமளித்தல், அவருடைய வழங்கல் போன்ற மற்றும் பல விஷயங்களை அவர் நமக்கு வெளிப்படுத்துவார். கீழே குறிப்பிட்டுள்ளபடி, ஆபிரகாமிய உடன்படிக்கையையும் பழைய உடன்படிக்கையையும் பார்க்கும்போது,கர்த்தர் தம்முடைய உடன்படிக்கை மூலம் ஜனங்களை அவர்களின் பணியிடங்களில் ஆசீர்வாதத்தை அனுபவிக்கச் செய்ததை நாம் காண்கிறோம்.

## உங்கள் ஸ்தலம் ஆசீர்வதிக்கப்பட்டது

ஆபிரகாம் தனது வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவித்தான். ஆபிரகாம் ஆரம்பத்தில் ஐசுவரியவானாகத் தோன்றினாலும் (ஆதியாகமம் 13:2), அவன் அதிக பலனை அடையவும் மேலும் பெருக்கத்தை அடையவும் தேவனுடைய ஆசீர்வாதம் அவனுக்கு உதவியது. *“ஆபிரகாம் வயதுசென்று முதிர்ந்தவனானான். கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார்”* (ஆதியாகமம் 24:1). *“கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார்; கர்த்தர் அவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொடுத்திருக்கிறார்”* (ஆதியாகமம் 24:35).

ஆபிரகாமுடைய குமாரன் ஈசாக்கு, தன் பணியிடத்தில் தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவித்தான். *“ஈசாக்கு*

*அந்தத் தேசத்தில் விதைவிதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்; அவன் ஐசுவரியவானாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான்"* (ஆதியாகமம் 26:12,13).

பழைய உடன்படிக்கையின் கீழ், தேவன் தமக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களுக்குப் பின்வரும் ஆசீர்வாதங்களை அறிவித்தார்.

**உபாகமம் 28:3-6**

**3 நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.**
**4 உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.**
**5 உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.**
**6 நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.**

மனிதனின் வீழ்ச்சி பணியிடத்தில் ஒரு சாபத்தைக் கொண்டுவந்தது; ஆனால் அவரோடுகூட இரத்தத்தினாலான உடன்படிக்கையில் இணைந்தவர்களுக்கு, தேவன் அவர்களின் பணியிடத்தில் ஒரு ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணினார். புதிய உடன்படிக்கையில் நாமும் இந்த ஆசீர்வாதத்தை எதிர்பார்க்க வேண்டாமா?

## உங்கள் கரங்களின் பிரயாசங்கள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்பட்டவை

மனிதனின் வீழ்ச்சியானது கஷ்டம், பாடுபடுதல், வியர்வை சிந்துதல், உழைப்பு மற்றும் பணியிடத்தில் அந்த உழைப்பிலிருந்து குறைந்தபட்ச பலனைப் பெறுதல் போன்றவற்றைக் கொண்டுவந்தது.

அவருடன் கூட இரத்தத்தினாலான உடன்படிக்கையில் இணைந்திருப்பவர்களுக்கு, அவர்களின் பணியில் ஆசீர்வாதங்களைவழங்குவதாகதேவன்வாக்குப்பண்ணினார்.

**உபாகமம் 28:8,12,14**

**[8] கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்.**

**[12] ஏற்ற காலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்.**

**[14] இன்று நான் உங்களுக்கு உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி நடக்கவும் அவைகளுக்குச் செவிகொடுத்துவந்தால், கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்.**

பழைய உடன்படிக்கையில், தம்முடைய வழிகளிலும் தம்முடைய வார்த்தையின்படியும் நடந்தால், அவர்கள் தங்கள் கரங்களின் எல்லா கிரியைகளிலும் ஆசீர்வாதமாய் இருப்பார்கள் என்று தேவன் வாக்குப்பண்ணினார். ஆகவேதான், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, சங்கீதக்காரன் இவ்வாறு எழுதினான்:

**சங்கீதம் 1:1-3**

**[1] துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,**

**[2] கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**[3] அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.**

நாம் புதிய உடன்படிக்கையில் இதை நம்முடைய வாழ்க்கையில் எதிர்பார்க்க வேண்டாமா?

## ஐசுவரியத்தைப் பெற தேவன் நமக்குப் பெலத்தைக் கொடுக்கிறார்

பழைய உடன்படிக்கையில் இருந்தவர்கள் கர்த்தருக்குப் பயந்து அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்ததால், அவர்களுடன் செய்த உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, ஐசுவரியத்தைப் பெறுவதற்கான அதிகாரத்தைத் தங்களுக்கு அளித்தவர் தேவன்தான் என்பதைப் புரிந்துகொண்டார்கள்.

**உபாகமம் 8:18**
**உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்.**

**சங்கீதம் 112:1-3**
**1 அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**
**2 அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்.**
**3 ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்; அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்.**

புதிய உடன்படிக்கையில் இதை நாம் எதிர்பார்க்க வேண்டாமா?

## நாசம்பண்ணுபவன் கண்டிக்கப்படுகிறான்

பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்கள் தங்கள் உழைப்பின் பலனால் தேவனைக் கனம்பண்ணக் கற்பிக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் பணியிடத்தில் பெற்றுக்கொண்டதிலிருந்து ஒரு பங்கை கர்த்தருக்குக் கொடுத்தனர். கர்த்தருக்குக் கொடுப்பது, உண்மையிலேயே தேவனை ஆராதிக்கும் செயலாக இருந்தபோதிலும், அவர்கள் இன்னும் அதிக பலனை அனுபவித்ததை உணர்ந்தனர்.

**நீதிமொழிகள் 3:9,10**
**9 உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு.**
**10 அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டோடும்.**

தங்கள் விளைச்சலில் (அதாவது, வருமானத்தில், சம்பாத்தியத்தில்) பத்தில் ஒரு பங்கைக் கீழ்ப்படிதலுடன் தேவனுடைய வீட்டிற்குக் கொண்டு வந்தவர்களுக்கு, தேவன் இவ்வாறு வாக்குப்பண்ணினார்:

**மல்கியா 3:11**
**பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

மனிதனின் வீழ்ச்சி பணியிடத்தில் “முட்களையும் குருக்குகளையும்” ஏற்படுத்தியது. ஆனால், அவர்களின் நிலத்தின் பலன்கள் அழிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்யும்படி, தமக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களாகிய, தம்முடைய உடன்படிக்கையின் ஜனங்களுக்கு தேவன்தாமே உத்தரவாதமளிப்பவராக நின்றார்.

புதிய உடன்படிக்கையில் இதை நம்முடைய வாழ்க்கையில் நாம் எதிர்பார்க்க வேண்டாமா?

## உங்கள் கரங்களின் பிரயாசத்தின் பலனை நீங்கள் அனுபவிப்பீர்கள்

பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்த தேவனுடைய ஜனங்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியாக, நம் வேலையையும், நம் வேலையின் பலனையும் நம்மால் சந்தோஷமாக அனுபவிக்க முடியும் என்பதைப் புரிந்துகொண்டனர். அது நமக்கு நன்றாகப் பொருந்தும்.

**சங்கீதம் 128:1,2**

**1 கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.**

**2 உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.**

**பிரசங்கி 3:13**

**அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக் குடித்துத் தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.**

**பிரசங்கி 5:19**

**தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.**

உங்களின் உழைப்பை சந்தோஷமாக அனுபவிப்பதும், உங்கள் உழைப்பின் பலனை சந்தோஷமாக அனுபவிப்பதும் தேவன் கொடுத்த வரமாகும். தேவன் இன்றும் இந்த வரத்தைத் தம்முடைய ஜனங்களாகிய நமக்குத் தருகிறார்!

# 3

# குறையுள்ள உலகில் பணி செய்தல்

நமது பணியிடத்தை நாம் மீட்பின் வெளிச்சத்தில் பார்க்கவும், அதன் மூலம் நமது வேலை, பணியிடம் மற்றும் பணி வாழ்க்கைக்கான தேவனுடைய ஆதி வடிவமைப்பை மீண்டும் கண்டுபிடிப்பதற்கான வழியை நாடவும் விசுவாசிகளான நம்மை ஊக்குவிக்க வேண்டும் என்பதே இந்த ஆய்விற்கான நோக்கமாகும். நிச்சயமாகவே, நாம் தற்போதைய நிலையில், உலகில் உள்ள மற்ற எல்லோரையும் போலவே நமது பணி வாழ்க்கையைக் கடந்து சென்றுகொண்டிருக்கலாம் அல்லது கிறிஸ்துவின் மீட்புப் பணியைச் செயல்படுத்தவும், பணியிடத்தில் நமது புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பெறவும் உறுதியாகத் தேர்வு செய்யலாம்.

நம் பணியிடத்தில் காரியங்கள் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாம்.

நீங்கள் உங்கள் தோட்டத்தைப் பராமரிக்கும்போது (உங்கள் வேலையைச் செய்யும்போது), தேவனுடைய முதலாவது சித்தத்தைக் கண்டுபிடிக்க முயற்சிப்பீர்களா? உங்களுடைய வேலை, பணியிடம் மற்றும் வேலை செய்யும் வாழ்க்கைக்கான உங்களது பலனைப் பெறுவதற்கு தேவனால் மீட்கப்பட்ட, உடன்படிக்கையின் பிள்ளையாக, நீங்கள் விசுவாசத்தோடு அவரை அணுகுவீர்களா?

## சிலுவையின் வல்லமை உங்கள் பணியிடத்திலும் பணி வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்பாருங்கள்

நாம் வீழ்ச்சியடைந்த உலகில் இருக்கிறோம். வாழ்க்கை எப்போதும் நமக்கு சாதகமாக இருப்பதில்லை. பணியிடத்தில் உள்ள காரியங்கள் எப்போதும் எளிதாக இருப்பதில்லை. ஏமாற்றங்கள், சவால்கள், பாரபட்சம் பார்க்கும் முதலாளிகள் மற்றும் பணியிடத்தில் நேர்மையற்ற செயல்களைச் செய்பவர்கள் என அநேக காரியங்களையும் நபர்களையும் சந்திக்க நேரிடும். சந்தைகளில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும்; பொருளாதார நிலையில் உயர்வு மற்றும் தாழ்வு ஏற்படும்; மேலும் பணிநீக்கங்கள், ஆட்குறைப்பு மற்றும் பிற எதிர்பாராத அசௌகரியமான மாற்றங்கள் இருக்கக் கூடும். நெறியற்ற முறையில் பெரும் லாபம் ஈட்டும் நிறுவனங்கள், தெய்வபயமில்லாத செயல்களை ஊக்குவித்தல் என்பன போன்ற மற்றும் பல காரியங்கள் இருக்கக் கூடும்.

ஒருபுறம் திரளான ஐசுவரியமும் மறுபுறம் மிகுந்த வறுமையும் பற்றாக்குறையும் இருக்கும். இவை அனைத்திற்கும் மத்தியில், விசுவாசிகளாகிய நாம், பணியிடத்தில் நாம் பெற்றிருப்பது எப்படிப்பட்ட ஒரு பங்காக இருந்தாலும் சரி, அதில் மீட்கப்பட்ட, உடன்படிக்கையின் ஜனங்களாக செயல்படுவோம் என்று தீர்மானிக்க முடியுமா?

### என் விசுவாசப் பிரகடனம்

*நான் எனது பணியிடத்திற்குச் செல்லும்போது, எனது பணி, பணியிடம் மற்றும் எனது பணி வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சிலுவையின் மீட்பின் வல்லமையை நான் பெறுகிறேன். சிலுவையின் நிமித்தமாக, சாபம் தலைகீழாக மாறியது; என் பணியிடம் ஆசீர்வதிக்கப்பட்டது.*

*சிலுவையின் நிமித்தமாக, நான் செய்யும் வேலையில் பலனையும் மகிழ்ச்சியையும் அறிக்கையிடுகிறேன். சிலுவையின் நிமித்தமாக, முட்களையும் குருக்குகளையும், பணியிடத்தில் எதிர்க்கும், இடையூறு விளைவிக்கும் மற்றும் வலியை ஏற்படுத்தும் விஷயங்களையும் நான் எதிர்க்கிறேன்; மற்றும் அதற்குப் பதிலாக, தேவனுடைய நோக்கங்கள் என் வாழ்வில் நிறைவேற வேண்டும் என்று நான் அறிக்கையிடுகிறேன். சிலுவையின் நிமித்தமாக, பணியிடத்திற்கான தேவனுடைய ஆதி வடிவத்தை நான் மீட்டுக்கொள்கிறேன்.*

## வேலைநாள் முழுவதும் உங்கள் தேவனை ஆராதியுங்கள்

உங்களைச் சுற்றியுள்ள மற்ற ஜனங்கள் "மாம்மோன் தேவன்" என்று அழைக்கப்படும் பிசாசுடன் கூட பட்சித்துப்போடப்பட்டாலும், எவ்விதத்திலும் இடைவிடாமல் ஐசுவரியத்தைப் பின்தொடர்கிறார்கள்; உங்கள் வேலைநாட்களில், நீங்கள் ஆண்டவரை ஆராதிக்கவும் அவருடைய பிரசன்னத்தை உணரவும் முயல்வீர்களா? உங்கள் வேலைநாள் முழுவதும் நீங்கள் வேலை செய்யும் இடத்தில் தேவனுடைய பிரசன்னத்தை உணர நீங்கள் நாடுவீர்களா? மற்ற அனைத்தும் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:33) என்பதை அறிந்து, உங்கள் வேலைநாளில் எப்பொழுதும் அவருடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் முதலில் தேட தீர்மானிப்பீர்களா?

நாள் முழுவதும் மனதிற்குள் அடிக்கடி ஜெபம் செய்வதுதான் இதைச் செய்வதற்கான சில வழிகளாகும். இது நாள் முழுவதும் தேவனிடத்தில் ஒரு சிறு ஜெபம் செய்வது, அதாவது, அவருக்கு "ட்வீட்" அனுப்புவது போன்றதாகும். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப்

பற்றி அவரிடம் பேசுங்கள்—நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் அழைப்பு, நீங்கள் செல்லவிருக்கும் கூடுகை, நீங்கள் வேலை செய்ய வேண்டிய வடிவமைப்பு, நீங்கள் பூர்த்திசெய்ய வேண்டிய விற்பனை இலக்குகள், நீங்கள் வழங்க வேண்டிய சொற்பொழிவு ... எதுவாக இருந்தாலும் சரி, அவற்றைப் பற்றி அவரிடம் பேசுங்கள்! நீங்கள் பார்க்கும் ஒவ்வொரு சிறிய ஆசீர்வாதத்திற்காகவும், நடக்கும் ஒவ்வொரு நல்ல விஷயத்திற்காகவும்,உங்களுடன்பணிபுரிபவர்களுக்காகவும் மற்றும் பல காரியங்களுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

நாள் முழுவதும் அவரைப் பற்றிய விழிப்புணர்வுடன் இருங்கள். உங்களால் முடிந்தபோதெல்லாம், உங்களுக்குள் ஒரு பாடலைப் பாடிக்கொண்டிருங்கள். *"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து,"* (எபேசியர் 5:19,20) உங்கள் மனதிற்குள் தேவனிடம் பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருங்கள்.

நாள் முழுவதும் சமாதானத்தோடும் தேவனுடைய அன்பிலும் நடங்கள். சமாதானத்தோடு நடப்பதும் அன்பில் நடப்பதும் *"அவரில்," அவரது சமூகத்தில் இருப்பதாகும். "... அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்"* (1 யோவான் 4:16).

## ஆராதனை செய்யுங்கள் மற்றும் தேவனுக்குப் பணி செய்வதைப்போல் பணி செய்யுங்கள்

உங்கள் வேலையை ஒரு வேலையாகவோ, செய்ய

வேண்டிய ஒரு கடமையாகவோ, நீங்கள் சுமக்க வேண்டிய பாரமாகவோ அல்லது வேறு சில "உலகப்பிரகாரமான" அல்லது தெய்வபக்தியற்ற காரியமாகவோ பார்க்காதீர்கள். தேவன் வேலையை வடிவமைத்திருக்கிறார்; அது ஒரு நல்ல விஷயம். நீங்கள் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புவதையே நீங்களும் செய்வீர்களானால், நீங்கள் அவருடைய திட்டத்தின்படி செயல்படுகிறீர்கள். நீங்கள் அவருடைய சித்தத்தைச் செய்கிறீர்கள். உங்கள் வேலையும் உங்கள் ஆராதனையும் தேவனுக்குச் செய்யப்படுவதுபோல் செய்யப்படுகிறது. நீங்கள் ஆராதிக்கும்போது, உங்கள் முழு மனதுடன் அவ்வாறு செய்கிறீர்கள். அதேபோல், நீங்கள் வேலை செய்யும்போதும், தேவனுக்குச் செய்வதுபோல் முழு மனதுடன் வேலை செய்யுங்கள்.

**கொலோசெயர் 3:23,24**

**23 நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தரால் பெறுவீர்களென்று அறிந்து,**
**24 எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.**

நீங்கள் வெறுக்கும் சில பணிகள் இருக்கலாம் என்பது உண்மைதான். உங்களை எந்த உயர்வுக்கும் அழைத்துச் செல்லாத சில பணிகள் உங்களுக்கு வழங்கப்படலாம். நீங்கள் முட்டுச்சந்து போன்ற சில பாதைகளில் பணியமர்த்தப்படலாம், மேலும் உங்களிடம் கேட்கப்பட்டதை நீங்கள் அடைவது சாத்தியமில்லை என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். நீங்கள் செய்வதை ஒருபோதும் பாராட்டாத நன்றியில்லாத முதலாளிகள் உங்களுக்கு இருக்கலாம். உங்களது சிறந்த முயற்சிகள் கவனிக்கப்படாமல் போகலாம். நாம் அனைவரும் பணியிடத்தில் இதுபோன்ற சூழ்நிலைகளை நிச்சயமாகவே எதிர்கொள்வோம். ஆனால், இதுபோன்ற விஷயங்களுக்கு மத்தியில், நீங்கள் தேவனை நோக்கிப் பார்த்து, அவரைப்

போலவே மகிழ்ச்சியோடும், நன்றியுள்ள இதயத்துடனும் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட எந்த வேலையையும் உங்களால் செய்ய முடியுமா? *“வேலையை யார் கட்டளையிட்டாலும் சரி, நீங்கள் உண்மையிலேயே தேவனுக்கு ஊழியம் செய்கிறீர்கள் என்பதை மனதில் வைத்துக்கொண்டு, உங்கள் முகத்தில் புன்னகையுடன் வேலை செய்யுங்கள்”* (எபேசியர் 6:6, தி மெசேஜ் வேதாகம பதிப்பு).

## பணியிடத்தில் தேவன் உங்களுடன் இருக்கிறார்

நீங்கள் வேலை செய்யும் இடத்திற்குச் செல்லும்போது, நீங்கள் தனியாக உள்ளே செல்வதில்லை. தேவன் உங்களுடனே கூட அங்கு வருகிறார். நீங்கள் அங்கே அவருடைய ஊழியக்காரராக இருக்கிறீர்கள் (எபேசியர் 6:6). தம்முடைய பரிசுத்த ஆவியினால் உங்களைப் பலப்படுத்தவும், உங்களுக்கு விஷயங்களைக் கற்பிக்கவும், உங்களுக்குக் காரியங்களை வெளிப்படுத்தவும், ஞானத்தையும், புரிந்துகொள்ளுதலையும் திறமையையும், வெளிப்பாட்டையும், நுண்ணறிவையும் மற்றும் பல காரியங்களையும் உங்கள் பணியிடத்தில் வழங்க தேவன் உங்களுடன் இருக்கிறார். வடிவமைப்பை உருவாக்க, சிக்கல்களைத் தீர்க்க, ஜனங்களுக்கு இடையிலான சண்டைகளைத் தீர்க்க, முன்னோக்கிச் செல்லும் பாதைக்கான திட்டத்தை உருவாக்க, மற்றும் பல காரியங்களில் உங்களுக்கு உதவ அவர் இருக்கிறார். எனவே, உங்கள் பணியிடத்தில், நீங்கள் அவருடன் இசைந்து, அவருடைய ஞானத்தைத் தேடுவீர்களா, அவருடைய படைப்புத் திறன்களை உங்கள் மூலம் வெளிப்படுத்தும்படி அவரிடம் கேட்பீர்களா? உங்கள் பணியிடத்தில் நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்யும்படி நீங்கள் தேவனுடன் இணைந்துகொள்வதையும், அவருடன் இணைந்து உழைப்பதையும் தெரிந்துகொள்வீர்களா? நீங்கள் ஒரு விவசாயியாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு பள்ளி ஆசிரியராக இருந்தாலும் சரி, வியாபாரியாக

இருந்தாலும் சரி, விற்பனையாளராக இருந்தாலும் சரி, அல்லது நீங்கள் என்ன செய்தாலும் சரி, தேவன் உங்களுடன் இணைந்து உழைக்க விரும்புகிறார்!

## பலன், பெருக்கம் மற்றும் அதிகரிப்பை ஒரு இயல்பான விளைவாக எதிர்பாருங்கள்

நீங்கள் தேவனுடனான உடன்படிக்கையில் இருப்பதாலும், நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று தேவன் அறிவித்திருப்பதாலும், பலன், பெருக்கம் மற்றும் அதிகரிப்பு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். முந்தைய அத்தியாயத்தில் இதைப் பற்றிக் கூற வேண்டிய பல காரியங்களை நாங்கள் உள்ளடக்கியுள்ளோம்.

- உங்கள் ஸ்தலம் (பணியிடம்) ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது.
- உங்கள் கரங்களின் அனைத்து கிரியைகளும் ஆசீர்வதிக்கப்பட்டவையாக இருக்கின்றன.
- ஐசுவரியத்தைப் பெற தேவன் உங்களுக்கு பெலத்தைத் தருகிறார்.
- நாசம்பண்ணுகிறவன் கண்டிக்கப்படுகிறான், உங்கள் உழைப்பின் பலனை அவனால் அழிக்க முடியாது.

அப்படியானால், நீங்கள் ஒருபோதும் தோல்வியையோ அல்லது பின்னடைவையோ அல்லது ஏமாற்றங்களையோ சந்திக்க மாட்டீர்கள் என்பது இதன் அர்த்தமல்ல. இந்தக் காரியங்களெல்லாம் நடக்கும். ஆனாலும், நீங்கள் தேவனுடனான ஒரு உடன்படிக்கையில் இருக்கிறீர்கள் என்பதையும், தேவன் இன்னும் உங்கள் பக்கத்தில் இருப்பதையும் நீங்கள் அறிந்திருப்பதால், இவற்றின் மத்தியில் மீண்டும் எழுந்திருப்பதற்கான நம்பிக்கையையும் தைரியத்தையும் உங்களால் பெற முடியும். சூழ்நிலையைப் பொருட்படுத்தாமல், நீங்கள் இன்னும் விசுவாசத்தினாலும் தைரியத்தினாலும் நிறைந்தவர்களாய், பலனளித்தல்,

பெருக்கம், மற்றும் அதிகரிப்புக்கு நேராக தேவன் உங்களை வழிநடத்துவார் என்று நீங்கள் தொடர்ந்து நம்புகிறீர்கள். அவர் நிச்சயமாக அப்படியே செய்வார்!

கடினமான காலங்களில், உங்களைக் கவனித்துக்கொள்வதாக அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

**சங்கீதம் 33:18,19**
**18 தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கிவிடுவிக்கவும்;**
**19 பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது.**

**சங்கீதம் 37:18,19**
**18 உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார்; அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும்.**
**19 அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள்.**

## உங்கள் வேலை சந்தோஷமாக செய்யும் ஒன்றாகவும், மகிழ்ச்சியளிப்பதாகவும் இருக்கும்

நாம் வேலை செய்வதன் மூலம் மகிழ்ச்சியைப் பெறும்படி தேவன் அதை வடிவமைத்தார். பணியிடத்தில் அவர் உங்களைக்கொண்டு செய்வதை, நீங்கள் பெரிய அளவில் செய்து முடிக்கும்படி, அங்கு உங்களை நிலைநிறுத்துமாறு நீங்கள் தேவனிடத்தில் கேளுங்கள். இங்குதான் நீங்கள் செழித்து, நீங்கள் செய்வதை சந்தோஷமாக அனுபவித்து மகிழ்வீர்கள். நீங்கள் அப்படிச் செய்வதில் தொடர்ந்து வளருங்கள். மாற்றங்களைச் செய்வதற்கும், அவர் வெளிப்படுத்த விரும்பும் புதிய விஷயங்களுக்கு மாறுவதற்கும் பயப்பட வேண்டாம். உங்கள் இருதயத்தில் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சந்தோஷத்தை பணியிடத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். நீங்கள் செய்வதை சந்தோஷமாக அனுபவித்து மகிழுங்கள். உங்கள் பணியிடத்தில் அவருடைய

நன்மையைக் கொண்டாடுங்கள்.

உங்கள் வேலையில் நீங்கள் அதிருப்தி, அமைதியின்மை மற்றும் பல காரியங்களைக் கண்டால், அதைப் பற்றி தேவனிடத்தில் பேச நேரம் ஒதுக்குங்கள். சில சமயங்களில், நமது மனப்பான்மையை மாற்றியமைக்க வேண்டியிருக்கலாம்; அதாவது, நம் இருதயங்களில் உள்ள வேலையைப் பற்றிய எண்ணங்களை மாற்றியமைக்க வேண்டியிருக்கலாம். சில நேரங்களில், ஒரு மாற்றம் அவசியம் என்பதற்கான குறிகாட்டியாகக் கூட அதிருப்தி இருக்கலாம். தேவனுடைய வழிநடத்துதலை நாடுங்கள் மற்றும் அவருடன் இணைந்து செயல்படுங்கள். மகிழ்ச்சியான இடத்தில் தங்கியிருங்கள்!

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற

விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள்

நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations** ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word–The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses–Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work–Its Original Design

புதியபுத்தகங்கள்தொடர்ந்துவெளியிடப்படுகின்றன.PDF,ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் ஆலோசனை மையம்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் ஆலோசனை மையமானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

**இளம் பிராய நடத்தை**

**பிறரோடு இணைக்கக் குறைபாடு**

**உறவுமுறை சவால்கள்**

**கல்வியில் பின்தங்கிய நிலை**

**தொழில் தொடர்பான பிரச்சினைகள்**

**குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்**

**பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்**

**நடத்தையில் சீர்கேடு**

**ஆளுமை குறைபாடு**

**உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்**

**மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி**

**மது / போதைப்பொருளுக்கு அடிமை**

**ஆவிக்குரிய போராட்டங்கள்**

**வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை**

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**வலைதளம்: chrysalislife.org**
**தொலைபேசி:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998
**மின்னஞ்சல்: counselor@chrysalislife.org**

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு, கர்நாடகா 560043

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* ***apcwo.org/give*** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.


**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

DOWNLOAD THE FREE APP!

*Search for*
"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

மனிதனின் வீழ்ச்சி பணியிடத்தில் அதன் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. பணியிடம் சபிக்கப்பட்டுவிட்டது. பலனை அனுபவிக்க வியர்வை சிந்தி, உழைத்து, பாடுபட வேண்டியிருக்கும். மேலும் இது ஒரு நபரின் வாழ்நாள் முழுவதும் தொடரும் செயலாக இருக்கும்.

விசுவாசிகளாக, நாம் வீழ்ச்சியடைந்த உலகில் வாழ்ந்தாலும் தேவனுடன் உடன்படிக்கை பண்ணப்பட்டு, மீட்கப்பட்ட ஜனங்களாக இருக்கிறோம். அப்படியானால், இவ்வுலகில் இருக்கும் தீமையை நாம் எதிர்கொள்வோம் என்பது உண்மைதான். இருப்பினும், கர்த்தரால் மீட்கப்பட்டவர்களாக—சிலுவையின் வல்லமை நம் வாழ்க்கையில் செயல்படும்படிக்கு, அந்தப் புதிய உடன்படிக்கையின் ஜனங்களாக வாழும்படி நாம் இங்கே இருக்கிறோம். எனவே, ஒவ்வொரு நாளும் நமது பணியிடத்திற்குச் செல்லும்போது, சிலுவையினால் உண்டான மீட்பின் வல்லமை நமது பணி, நமது பணியிடம் மற்றும் நமது பணி வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதை நாம் விசுவாசிக்க வேண்டும். சிலுவையின் மூலமாக, பணியிடத்திற்கான தேவனுடைய ஆதி வடிவமைப்பை நாம் மீட்டெடுக்க முடியும்.

**All Peoples Church & World Outreach**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org